சர்வதேச
ரெலிபோன் சேவை
பாதுகாப்பான இடம்
தங்க அறை வசதி
24 மணிநேர சேவை
(எல்லா நாட்களும்)
MCT 1ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
Tele: 24791, 24886

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/=

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

வெளிநாட்டுப்
பிரயாணம்
0 துரித ஒழுங்குகள்
0 சலுகைக் கட்டண விமானச் சீட்டுகள்
0 Confirmations. Reconfirmations
0 பாஸ்போட், விசா, பெர்மிட்
MCT 1ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
Tele: 24791, 24886

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு சித்திரை மீ 23 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ஷஃபா பிறை 26 (06-05-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY சுதிர்:144

# இந்திய அதிகாரிகள் கூட்டணியினருடன் இவ்வாரம் பேச்சு

## இலங்கை அரசின் புதிய கருத்துக்கள் பற்றி ஆராய்வர்

புதுடில்லி, மே. 5

இலங்கை அரசின் புதிய கருத்துக்கள் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடன் இந்திய அரசு அதிகாரிகள் இவ்வார இறுதியில் பேச்சுக்கள் நடத்துவர்.

அதற்காக அடுத்த சில தினங்களில் கூட்டணித் தலைவர்கள் புதுடில்லி செல்வர்.

இலங்கை அரசு, இணை அமைச்சர் பா. சிதம்பரம் தலைமையிலான இந்தியக் குழுவிடம் மாகாணக் கொள்கை, சட்டம் - ஒழுங்கு பராமரிப்பு சம்பந்தமாக சில திட்டவட்டமான கருத்துக்களை எழுத்து மூலம் சமர்ப்பித்திருந்தது.

அந்தக் கருத்துக்கள் இப்பொழுது புதுடில்லி அதிகாரிகளால் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

மாகாண சபைக்கான பொலிஸ் படை அமைப்பது குறித்து சில திட்டவட்டமான கருத்துக்களை இலங்கை அரசு தெரிவித்துள்ளதாம்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை யோசனை: இந்தியா பரிசீலனை

### பகத் அறிவிப்பு

புதுடில்லி, மே 5

சட்டம் — ஒழுங்கு, காணிக்குடியேற்றம் ஆகியவை சம்பந்தமாக இலங்கை தெளிவான விவரங்களை இந்தியத் தூதுக் குழுவிடம் இலங்கை அரசு சமர்ப்பித்திருக்கிறது.

இவை தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவேற்றுபவையாக இருக்குமா என்பது குறித்து கவனமாக பரிசீலனை செய்யப்படும்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பகத் இதனை நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

## அரிசி ஆலை தீக்கிரை

கல்முனை, மே 6

கல்லாறு—பெரிய நீலாவணையில் தமிழர் ஒருவருக்குச் சொந்தமான அரிசி ஆலை ஒன்று அடந்த வெள்ளியன்று தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

## நாவற்குழியில் ஷெல் தாக்குதல்

கைதடி, மே 6

ஞாயிறு இரவு நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

சுமார் அரை மணி நேரம் தாக்குதல் நீடித்தது.

ஷெல் தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன் விமானம் ஒன்று கைதடி—நாவற்குழிப் பகுதியை இரு முறைகள் வட்டமிட்டு விட்டுச் சென்றிருந்தது.

# காங்கேசன் கிளையில் அடகு வைத்த நகைகள் 9, 10, 11இல் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், மே 6

காங்கேசன்துறை மக்கள் வங்கிக் கிளையில் அடகு வைக்கப்பட்ட நகைகள் மே 9, 10, 11ஆம் திகதிகளில் திருப்பி ஒப்படைக்கப்படவுள்ளன.

நகைகளை அடகு வைத்தவர்கள் முதலில் காங்கேசன்துறை மக்கள் வங்கிக் கிளைக்குச் சென்று அந்நாட்சிக் கடிதமும் டோக்கன் இலக்கமும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அப்போது பலாலி முகாமுக்குச் சென்று நகைகளைப் பெறும் திகதி அவர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

இப்படி மக்கள் வங்கிப் பிராந்திய முகாமையாளர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதனிடையில் யாழ். ஸ்டான்லி வீதி, மக்கள் வங்கிக் கிளையில் அடகு வைக்கப்பட்ட நகைகளை மீட்காதவர்களுக்கு மீட்டுக் கொள்ள மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்

(4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

6-5-1986

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:
10 26 முதல் 11 56வரை
ராகுகாலம்:
2 56 முதல் 4 26 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

பிரதோஷ விரதம்

# ஆஸ்பத்திரியில் கடிபட்ட தாதிகள்!

கொழும்பு, மே 6

கொழும்பு ஆஸ்பத்திரியில் நேற்று இரண்டு தாதிகள் கடிபட்டனர்! இதனால் காயமுற்ற இரண்டு பேரும் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டனர்.

வேலைநிறுத்தம் செய்த தாதிகளும் தற்போது வேலைக்குச் செல்கின்றனர். ஆனால் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி இத்தாதிகள் கறுப்புப் பட்டி அணிந்து வேலை செய்கின்றனர்.

இந்த இயக்கம் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

அச்சமயம் வேலைநிறுத்தம் செய்துவிட்டு வேலைக்குத் திரும்பிய ஒரு தாதியும் வேலை நிறுத்தம் செய்யாத இன்னொரு தாதியும் வாக்குவாதப்பட்டனர். ஆளை ஆள் அடித்துக்கொள்ளவில்லை; கடித்துக்கொண்டனர்.

கடிகாயங்களுக்கான இரண்டு தாதிகளும் காயங்களுடன் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டனர்.

## அத்துலத் வெளிநாடு பயணம்

கொழும்பு, மே 6

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை திடீரென்று வெளிநாடு பயணமானார்.

அமைச்சருடன், பாதுகாப்பு அமைச்சு உயர் அதிகாரிகள் கோஷ்டி ஒன்றும் பயணமாகியது.

இந்த அவசர பயணத்தின் நோக்கம் என்ன என்பதை அறியமுடியவில்லை. மிகவும் மர்மமான முறையில் அமைச்சரின் பயணம் அமைந்தது.



யாழ்ப்பாணம் வின்ஸர் சந்தி கடந்த நான்கு தினங்களாக ஒரு கண்காட்சி நிலையம் போலக் காட்சி அளித்தது.

கார்கள், வான்கள், லொறிகள், மோட்டார் சைக்கிள்கள் என்றும், ரேடியோ, ரீ.வி., டெக் என்றும் நானாவிதப் பொருள்கள் அங்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

காலை முதல் மாலை வரை பாராமல் எப்போதும் பெரும் எண்ணிக்கையான மக்கள் அவற்றைக் கூடிநின்று பார்த்தவண்ணம் இருக்கின்றனர்.

கொள்ளையிடப்பட்ட தங்கள் பொருள் ஏதாவது அங்கு இருக்கிறதா என்பதனை அறியவே அந்தச் சனக்கூட்டம்.

கொள்ளைபோன இத்தப் பொருள்களை இளைஞர் இயக்கம் ஒன்று மீட்டு அவற்றைப் பறிகொடுத்தமக்களை அடையாளம் காட்டித் திருப்பப் பெறுமாறு கேட்டுக்கொண்டது.

வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்ட வாகனங்களை மக்கள் குழுமி நின்று பார்த்தபோது எடுக்கப்பட்ட படங்களை மேலே காணலாம்.

# 15க்குமேற்பட்ட வாகனங்கள் நேற்று உரியவர்களிடம் ஒப்படைப்பு

தல்லூர், மே 6

பதினைந்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் நேற்று உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

கடந்த சில தினங்களாக குடா நாட்டின் பல பகுதிகளிலும் நடைபெற்ற இரண்டு இளைஞர் கோஷ்டிகளின் மோதலின்போது முப்பதுக்கும் மேற்பட்ட வாகனங்கள் ஒரு கோஷ்டியினரால் கைப்பற்றப்பட்டன.

இவைகள் யாழ். வின்சர் சந்தியிலும், ஆரியகுளம் சந்தியிலும் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன.

மீட்கப்பட்ட வாகனங்களைப் பொது மக்கள் பார்வையிட்டுத் தங்கள் வாகனங்களுக்கான ஆதாரங்களைக் காட்டித் திரும்பப் பெற்றுச் செல்கிறார்கள்.

இந்த வரிசையில் நேற்று மட்டும் பத்துக் கார்களும் ஜீப் ஒன்றும், மினிவான்கள் இரண்டும், மோட்டார் சைக்கிள்கள் மூன்றும் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.




நல்ல காலம் அவை ஆஸ்பத்திரியில் இருக்கிற நோயாளியவன் எவரையும் கடிக்காமல் விட்டு விட்டினம்! காலம் இருக்கிற கோலத்திலை அப்படிச்செய்தாலும் ஆச்சரியப்படுறதுக்கு ஒன்டுமில்லைப் பாருங்கோ...!

# மல்லாகம் - தெல்லிப்பளையில் ஹெலிக்கொப்டர் தாக்குதல்!

## இரு மினிபஸ்கள், 'கூல்பார்' சேதம்

### மாணவர்கள் சிதறி ஓட்டம்

பலாலி, மே 6

நேற்று நண்பகல் 12-30 மணி அளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று மல்லாகம் - தெல்லிப்பளை வீதியில் கட்டுவன் அப்பொழுது அம்பனை என்ற இடத்தில் இரு மினி பஸ்கள் சேதம் அடைந்தன.

வீதியின் ஓரங்கள் சிதறின. விடுமுறைக்குப் பின்னர் பாடசாலைகள் தொடங்கிய முதலாவது நாளான நேற்று ஹெலிகொப்டர் தாக்குதலின்போது மாணவர்கள் சிதறி ஓடினர்.

ஹெலிக்கொப்டர் தாக்குதலின்போது அம்பனை சந்தியில் "கூல்பார்" ஒன்றும் சேதம் அடைந்தது.

மினிபஸ்கள் மீதான தாக்குதலின்போது பிரயாணிகள் எவரும் பாதிக்கப்படவில்லை.

வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வெறும் மினிபஸ்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது. இரு மினிபஸ்களும் பாவிக்க முடியாத அளவு சேதம் அடைந்தன.

ஹெலிக்கொப்டர் சுற்றிக் கொண்டிருந்த போது கரும்புகை நிறமுடைய விமானம் ஒன்று பலாலி விமான நிலையத்தில் இருந்து தெற்கு நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

ஹெலிக்கொப்டர் மிக உயரத்தில் இருந்து சுட்ட போது ஹெலிகொப்டரில் இருந்து புகை வெளியேறியதைக் காணமுடிந்தது.

## ஷெல், பீரங்கித் தாக்குதல்களினால்

# காவலூரில் பலர் வெளியேற்றம் தேவ மாதா ஆலயமும் சேதம்

### பங்குத் தந்தை தப்பினார்

வேலணை, மே 6

காரைநகர் கடற்படையினரால் காவலூர் பக்கமாக அடிக்கடி மேற்கொள்ளப்பட்டு வரும் ஷெல், பீரங்கித் தாக்குதல்களினால் அப்பகுதிகளில் குடியிருந்த பலர் தங்களது வீடுவாசல்களை விட்டு வெளியேறி உள்ளனர்.

காவலூரில் இருக்கும் கிறிஸ்தவ ஆலயங்களை நோக்கியும் பீரங்கி, ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்ற 3 ஆம் திகதி சனிக்கிழமை காரைநகர் கடற்படை முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல், பீரங்கித் தாக்குதலினால் காவலூர் பட்டினத்தில் இருக்கும் புனித தேவ மாதா ஆலயம் சேதம் அடைந்தது.

அதற்கு அருகாமையில் இருக்கும் பங்குத் தந்தை அருள் திரு எல். எவ். இருதயநாதன் அடிகளின் இல்லமும் சேதம் அடைந்தது. பங்குத் தந்தை கயிலைமுடியில் தப்பினார்.

ஆலய வளவில் இருந்த பல தென்னை மரங்களும் பலத்த சேதத்துக்குள்ளாகின.

## ஒய்வூதியம் நேற்று வழங்கப்படவில்லை

யாழ்ப்பாணம், மே 6

கொக்குவில், பருத்தித்துறை, காங்கேசன்துறை உபதபால் நிலையங்கள் மூலம் ஓய்வூதியம் பெற்று வந்தவர்களுக்கு நேற்று வழங்கப்படவிருந்த ஓய்வூதியம் தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டது.

இவர்களுக்கு மே 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். தலைமைத் தபால் நிலைய பாட்டரங்கில் சார்ந்த ஏப்ரல் மாதத்துக்கான ஓய்வூதியம் வழங்கப்படும் என்று யாழ். பிரதம தபால் நிலைய நிர்வாகம் அறிவித்து உள்ளது.

# போதை வஸ்து வைத்திருந்தவருக்கு மரண தண்டனை!

கொழும்பு, மே 6

இலங்கையில் போதை வஸ்து வைத்திருந்த பாகிஸ்தானியர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்தது.

ஆனால் பிணையில் விடப்பட்டிருந்த இந்தப் பாகிஸ்தான் பிரஜை வழக்கு விசாரணைக்கு முன்னரே நாட்டைவிட்டுத் தப்பி ஓடிவிட்டார்.

1984ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆயிரம் கிராம் ஹிரோயின் வைத்திருந்ததாக ஏ. ஹமீட் என்ற இந்த நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

கைது செய்யப்பட்ட பின்னர் 30 ஆயிரம் ரூபா பிணையில் விடப்பட்டிருந்த இவர் பின்னர் நீதிமன்றத்திற்கு சமூகமளிக்கவில்லை. அவர் நாட்டைவிட்டுத் தப்பி ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவருக்கு எதிரான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு எச். டபிள்யூ. சேனநாயக்கா முன்னிலையில் எதிரி இல்லாமலேயே இரண்டு நாட்கள் விசா

(4ஆம் பக்கம் பார்க்க)

## விமானத்தின் பெறுமதி 36 கோடி ரூபா

கொழும்பு, மே 6

கடந்த சனிக்கிழமை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட எயர் லங்காவின் ரைஸ்டார் விமானத்தின் பெறுமதி 36 கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

# காரைதீவில் தம்பதியரைக் கடத்திய பின்னர் வீடு தீக்கிரை

கல்முனை, மே 6

காரைதீவில் தமிழர் ஒருவருடைய வீட்டிற்கு நள்ளிரவில் திடீரென சிவில் உடையில் வந்த ஒரு கோஷ்டி வீட்டுக்காரரையும் அவரது மனைவியையும் கண்ணைக்கட்டி வீட்டிலிருந்து கடத்தினர். பின்னர் அவர்களது வீட்டைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

இந்தச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்றது.

காரைதீவு 3ஆம் குறிச்சியைச் சேர்ந்த திரு. குழந்தைவேல் என்பவரின் வீடே தீக்கிரையானது.

இச்சம்பவம் குறித்துச் சொல்லப்படுவதாவது:—

குழந்தைவேலுவையும் அவரது மனைவியையும் கண்ணைக்கட்டி வேறு ஓர் இடத்தில் கொண்டுபோய் இறக்கிவிட்டனர். பின்னர் அவரது வீட்டுக்கு வந்து அதனைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

குழந்தைவேலின் பிள்ளைகள் ஒருவர் ஏற்கனவே காது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்று அறியவருகிறது.

# புலிகளின் எழுச்சி தென் இலங்கைக்கு தலையிடி என்கிறது 'திவயின'

கொழும்பு, மே 6

"வடக்கில் இடம்பெற்ற மோதல்கள், தெற்குக்கு கேடாகுமா?" — என்ற தலைப்பில் கொழும்பில் இருந்து வெளிவரும் 'திவயின' சிங்கள நாளிதழின் ஞாயிறு பதிப்பில் செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

பிரபாகரனின் தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கில் தலை எடுப்பது பாதுகாப்புப் படையினருக்குத் தலையிடியைக் கொடுத்துள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## பேகம் வியா வீட்டுக் காவலில்

புதுடில்லி, மே 5

பங்களாதேஷின் எதிர்க்கட்சிக் கூட்டணியினதும் தேசியக் கட்சியினதும் தலைவியான பேகம் கலிதா வியா வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

இளைய தலைமுறையினர் உதயமாகும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

உதயன்

13, ... வீதி, யாழ்ப்பாணம்.    தொலைபேசி: 24305 ...    06-05-86

## விஷப் பரீட்சைகளை நிறுத்த வேண்டும்

அமெரிக்க விண்வெளித் திட்டத்தின்கீழ் ஏவப்பட்ட றொக்கெட்டுக்களில் மூன்றாவது றொக்கெட்டும் வெடித்துச் சிதறி இருக்கிறது. இது மூன்று மாத காலத்திற்குள் நடந்த மூன்றாவது விபத்து.

இதே வேளை கடந்த வாரத்தில் ரஷ்யாவின் அணு உலைகளில் ஒன்று விபத்துக்கு உள்ளாகி வெடித்து எரிந்திருக்கிறது. அதன் விளைவாக ரஷ்யா எல்லையோடு உள்ள அயல் நாடுகளும் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக அஞ்சப்படுகிறது.

அமெரிக்க றொக்கெட்டுக்கள் வெடித்துச் சிதறியதாலும், வானமும், கடலும் மாசுபடும் அபாயம் தோன்றி உள்ளது.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் மனிதனின் வாழ்க்கை முன்னேற்றத்துக்குப் பெரிதும் உதவி இருக்கின்றன. அதில் சந்தேகம் இல்லை.

ஆனால் மனிதத் தேவைக்கு அப்பாற்பட்ட விதத்தில் விஞ்ஞானப் போட்டி நடத்த முனைவதால் மனித குலத்துக்கே பெரும் ஆபத்து விளையப்போகிறது. இதனை வளர்ச்சி அடைந்த நாடுகள் உணருவதாயில்லை. குறிப்பாக இரண்டு வல்லரசுகளும் இவ்விஷயத்தில் அதிக கவனம் செலுத்துவதாக இல்லை.

அணு ஆயுதப் போட்டியைத் தவிர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடந்தனவாயினும் ஆக்கபூர்வமான முடிவு எதுவும் இதுவரை காணப்படவில்லை. ஒருவரை மற்றவர் மாறி மாறிக் குற்றம் சாட்டுவதிலும், இழுத்தடிப்பதிலுமே காலம் கழிகிறது.

அவர்கள் இருசாராரும் பேசி முடிக்கு முன் அணு ஆயுதப் போட்டியையும், விண்வெளிப் போட்டியையும் கட்டுப்படுத்துவதற்கு முன்னர் விபரீத விஞ்ஞான விபத்துக்கள் ஏற்பட்டு உலகம் ஒரு நொடியில் நஞ்சாகிவிடலாம் அல்லது மனிதர்களை வாட்டும் கொடிய நோய்கள் பரவலாம்.

மனிதர்கள் இறந்தபின் — உலகம் அழிந்தபின் விஞ்ஞானமும் விளைவுகளும் யாருக்குத் தேவை?

அணு ஆயுதப்போட்டி, விஞ்ஞானப்போட்டி, விண்வெளிப் போட்டி என்று திசைமாறி உலகத்தைப் பூண்டோடு அளிக்கும் விஷப்பரீட்சை நிறுத்தப்பட வேண்டும்.

அவற்றுக்குச் செலவிடும் அபரிமிதமான பொருள் வளத்தை, வசதி குன்றிய — வளம் குறைந்த நாடுகளில் வாழும் மக்களின் தரத்தை உயர்த்துவதற்குச் செலவிட முன்வர வேண்டும்.

ஆபிரிக்க நாடுகள் உட்பட, மூன்றாம் உலக நாடுகளில் பசியும், பட்டினியும், அடிப்படை வசதிகள் இல்லாத வாழ்க்கையும் மலிந்து மக்கள் நலிவுறுகின்றனர்.

வளம் குன்றிய நாடுகள் தமது பொருளாதாரத்தைப் பலப்படுத்தக் கூடிய திட்டங்களைச் செயற்படுத்தவும், தேசத்தை அபிவிருத்தி செய்யவும் வளர்ச்சி அடைந்த நாடுகள் உதவ வேண்டும். அங்குள்ள மக்கள் தமது அடிப்படை வாழ்க்கைத் தேவைகளை - ஆதார வசதிகளைப் பெற உதவி நல்க வேண்டும்.

அதுவே மாண்ட வரலாற்றைத் தொடர வழி செய்யும். விஞ்ஞானப் போட்டியை விம்புக்கு நடத்தி மக்களை அழித்தொழிக்க வேண்டாம். பட்டினியால் மனிதன் சாகும் நிலையை நீடிக்கவிட வேண்டாம். அதுவே தர்மம்.

இதனை இரண்டு வல்லரசுகளும், (குறிப்பாக அமெரிக்கா) உணர்ந்து கொள்ளாவிடில் அவற்றுக்கும் நாசம் விளைவது திண்ணம்.

## கிழக்கு-மேற்கு பிணக்கு

# உயர்மட்ட பேச்சு தீர்வுக்கு வழியாகும்

### டோக்கியோ உச்சிமாநாட்டில் 7 நாடுகள் தீர்மானம்

டோக்கியோ, மே 5

உலகின் கிழக்கு மேற்கு பிணக்கு உயர் மட்டப்பேச்சுவார்த்தை மூலமே தீர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு உலகின் 7 செல்வந்த நாடுகளின் தலைவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெறும் உச்சி மாநாட்டின் தலைவர்கள் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளனர்.

சேர்ந்திய கட்டுக்கோப்பான உடைமை நிறைவைப் பாராமரிப்பது என்றும் வாஷிங்டனின் ஆயுதக் கட்டுப்பாட்டு முயற்சிகளுக்கு ஆதரவளிப்பது என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவை ஜெனீவா பேச்சுக்களுக்கு ஆதரவாக நடந்து கொள்ளுமாறு அறிக்கையில் மேலும் கோரப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் நிகழ்ந்த அணு உலை விபத்து தொடர்பான அறிக்கை ஒன்றும் சர்வதேச பயங்கரவாதம் தொடர்பான அறிக்கை ஒன்றும் இந்த மாநாட்டில் வெளியிடப்படும் என மேலும் எதிர்பார்க்கப்படுகிறது.

பயங்கரவாதம் தொடர்பான அறிக்கையில் எந்த நாடுகளின் பெயர்களையும் குறிப்பிடுவதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

லிபியா மீது பொருளாதார நெருக்கடிகளைத் தோற்றுவிக்க வேண்டுமென்ற அதிபர் றேகனின் கோரிக்கை தொடர்பாக மாநாட்டில் அபிப்பிராய பேதம் நிலவியதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஈரான் எண்ணெய் நிலைகளில் தாக்குதல்

பாக்தாத், மே 5

ஈரானின் எண்ணெய் நிலைகள் மீது தனது விமானங்கள் பலத்த தாக்குதல் மேற்கொண்டதாக ஈராக் தெரிவித்துள்ளது.

தென்குடாப் பகுதி யுத்தமுனைக்கு 50 மைல் தூரத்திலுள்ள அஹ்வாஸ் என்ற இடத்திலுள்ள குதங்களே தாக்குதலுக்கு இலக்கானதாக மேலும் ஈராக் தெரிவித்துள்ளது.

தமது விமானங்கள் வியக்கத்தக்க முறையில் வெற்றிகரமாக இத்தாக்குதலை நடத்திவிட்டு பாதுகாப்பாகத் தளத்துக்கு மீண்டு விட்டதாக ஈராக்கின் இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சமாதான விண்ணப்பங்களைத் தொடர்ந்து நிராகரித்து வரும் ஈரானுக்குக் கொடுக்கப்பட்ட மறுதண்டனை இது என அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## வெளி உலகில்

### அமெரிக்க நடவடிக்கைகளால் லிபியா கியூபா ஆகலாம்

#### கேர்ணல் கடாபி எச்சரிக்கை

டோகா, மே 5

அமெரிக்காவின் அடாதுட்டித்தனம் லிபியாவை வார்சோ உடன்படிக்கை நாடுகளுக்கு வெகு அண்மையில் கொண்டு போய்ச் சேர்த்துவிடும்.

இவ்வாறு கேர்ணல் கடாபி கூறியதாக சொல்லப்பட்டுள்ளது.

கட்டாரின் அல்றேயா பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே கடாபி அவ்வாறு கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 15 ஆம் திகதி திரிப்போலியிலும், பெங்காஸியிலும் மேற்கொள்ளப்பட்ட அமெரிக்கத் தாக்குதல் பற்றிக் கடாபி கருத்து வெளியிட்டார்.

வட அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்பு அமெரிக்கத் தலைமையில் சமநிலையை மீறிவிட்டது.

இந்த மீறுதல் இந்தப் பிராந்தியத்திலுள்ள மற்றைய ஒப்பந்த அமைப்பையும் பக்கம் சாரும் நிர்ப்பந்தத்துக்கு இது உள்ளாக்குகிறது.

அமெரிக்க நடவடிக்கைகள் இதற்குமுன் கம்யூனிஸ நாடாக இருக்காத லிபியாவை ஒரு கியூபா ஆக்கி விடும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்குகின்றன.

வாஷிங்டன் இப்பொழுது உரத்துப்பேசி வரும் சர்வதேச பயங்கரவாதம் என்ற பதம் லிபியாவுக்கும் மற்றும் நாடுகளுக்கும் எதிராக அமெரிக்க மேற்கொண்டு வரும் தாக்குதல்களை நியாயப்படுத்துவதற்காகவே திட்டமிடப்பட்டதாகும்.

இவ்வாறு கடாபி தெரிவித்துள்ளார்.

#### துஷ்பிரயோகம் ஆதாரமில்லை

பிலிப்பீன்ஸ் சர்க்காரின் பொருளாதார உதவியை மார்க்கோஸ் அரசு துஷ்பிரயோகம் செய்தது என்ற குற்றச்சாட்டுக்கு ஆதாரங்கள் இல்லை.

இவ்வாறு காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

## ரஷ்ய அணு உலை விபத்து

### மரண காரணம் கதிர் வீச்சு அல்ல

#### பிரான்ஸ் நிபுணர் கருத்து

பரிஸ், மே 5

ரஷ்யாவின் செர்னோபில் அணுஉலை விபத்தில் இறந்த இருவரும் றேடியோ கதிர் வீச்சுத் தாக்கத்தால் இறக்கவில்லை.

இவ்வாறு பிரான்ஸின் அணு ஆராய்ச்சி நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

உலை எரிந்து கொண்டு இருந்த அணு உலை மீது தீ அணைக்கும் படையினர் தண்ணீரை அடித்ததால் உலை வெடித்தது. அதனாலேயே இருவரும் இறக்க நேரிட்டது.

ரஷ்ய அணு உலை விபத்தில் காயமடைந்தவர்கள் பலரும் றேடியோ கதிர் வீச்சுச் செறிவினால் இறக்கக் கூடும்.

ரஷ்ய அணு உலையின் றேடியோ கதிர் வீச்சு மட்டம் மிகக் குறைந்த அளவினதாகும்.

அத்துடன் அயலில் உள்ள நாடுகளை அச்சுறுத்தக் கூடிய அளவுக்கு கூடுதலாகத் திட்டமிடப்படவில்லை எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

#### மூடிவிட உத்தரவு

லேகஸ், மே 5

நைஜீரியாவில் உள்ள வைத்தியசாலை ஒன்றை மூடிவிடுமாறு பாதுகாப்புத்துறை உயர்பீடம் உத்தரவிட்டுள்ளது.

நைஜீரியாவில் முதலாவது டெஸ்ட் ட்யூப் குழந்தையை தரவிருந்த தனியார் மருத்துவமனை ஒன்றே, இவ்வாறு தடை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி அரச உயர் அதிகாரி ஒருவர் கருத்துக் கூறுகையில், 'அவர்களிடம் போதிய திறமை வாய்ந்த மருத்துவர்களோ, விஞ்ஞானிகளோ இல்லை. அவர்களது சாதனைக் கூச்சல் போலித்தனமானது' எனத் தெரிவித்துள்ளார்.

#### ரஷ்யாவில் அமெரிக்க நிபுணர்

மாஸ்கோ, மே 5

அமெரிக்க எலும்புமச்சை மாற்று மருத்துவத்துறை நிபுணர் சோவியத் வந்து சேர்ந்தார்.

சோவியத்தில் அண்மையில் ஏற்பட்ட அணு உலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காகவே அமெரிக்க நிபுணர் அழைக்கப்பட்டுள்ளார்.

மாஸ்கோ விமான நிலையத்தில் வைத்து சோவியத் அதிகாரிகளால் வைத்திய நிபுணர் றொபேட் கால் அழைத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



பொய்யாமொழி

குறள்:

எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல்.

பொருள்:

தினையளவும் ஆராய்ந்து பார்க்காமல் பிறனுடைய மனைவியிடம் செல்லுதல், எவ்வளவு பெருமையை உடையவராயினும் என்னவாக முடியும்

# கிளிநொச்சி: 80 சதவீத பஸ்கள் சேவையிலில்லை

கிளிநொச்சி, மே 6

கிளிநொச்சி இ. போ. சபையிலுள்ள சுமார் 24 பஸ்களில் நாளாந்தம் சராசரி நான்கு பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றன.

இதனால் பொது மக்கள் சிரமத்திற்குள்ளாவதோடு தனியார் வாகனச் சொந்தக்காரர்களுக்கு கூடுதல் பணத்தைச் செலுத்தி பிரயாணம் செய்ய வேண்டி உள்ளது.

கிளிநொச்சி இ. போ. சாலையில் உள்ள பஸ்களில் 80 சதவீதமானவை பழுதடைந்துள்ளன.

இவற்றைத் திருத்தி சேவையில் ஈடுபடுத்த உதிரிப் பாகங்கள் இல்லையாம். அதே சமயம் சேவையில் ஈடுபடும் சொற்ப பஸ்களிலும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சில சமயம் இரண்டு பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றன.

கிளிநொச்சி டிப்போவில் பல பஸ்கள் பழுதடைந்துள்ளதால் 300க்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் தமது கடமைகளை செவ்வனே செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

### பாமாலை வெளியீடு

புங்குடுதீவு, மே 9

புங்குடுதீவு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் மீது ஆசிரிய மணி இ. க. நாகலிங்கம் பாடிய பாமாலையொன்று அண்மையில் பிரஸ்தாப ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபையினரால் நூல் வடிவில் வெளியிடப்பட்டது.

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மனையும் கண்ணகி அம்மனையும் போற்றித் துதிக்கும் வகையில் அமைந்த இப்பாமாலை பிரஸ்தாப ஆலய இரதோற்சவத்தன்று வெளியிட்டு வைக்கப்பட்டது.

### நாரந்தனை - சுருவில் மின்சார அபிவிருத்தி வேலைகள் மீண்டும் ஆரம்பம்

ஊர்காவற்றுறை, மே. 6

நாரந்தனை, சுருவில் பகுதிகளுக்கான மின்சார அபிவிருத்தி வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நீண்ட நாட்களாக தடைப்பட்டிருந்த இவ் வேலைகள், புதிய மின்சார, தொழில் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்ட பின் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று யாழ் அபிவிருத்திச் சபையின் நாரந்தனை அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. கணேசலிங்கம் தெரிவித்தார்.

யாழ் அரசாங்க அதிபரினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ... இவ்வேலைகள் ... குறைந்த ... நடைபெறுகின்றன.

### மின்சார விநியோகத்துக்கு நிதி சேகரிப்பு

வட்டுக்கோட்டை, மே 6

வட்டுக்கோட்டை நவாலி வீதிக்கு மின்சார விநியோகம் செய்வதற்கான துரித நடவடிக்கைகளை நவாலி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வீதி மின்சார விநியோகத்திற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் சுமார் 65 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

மேலதிகமாகத் தேவைப்படும் பணத்தை சமாளிப்பதற்காக இக்கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் இங்குள்ள பொது மக்களிடம் நிதி சேகரித்து வருகின்றனர்.

### பொதுக் கூட்டம்

ஊர்காவற்றுறை, மே 6

காவலூர் இலக்கிய வட்டத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் ... திகதி ... மணிக்கு ... நிலையத்தில் நடைபெறும்.

### பூநகரியில் நடமாடும் மகளிர் பயிற்சி நிலையம்

பூநகரி மே 6.

பூநகரி - நல்லூரில் நடமாடும் மகளிர் பயிற்சி நிலையம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இது சம்பந்தமான பொதுக்கூட்டம் திஸ்கோ கூட்டுறவுச் சங்க பூநகரி பிரதேச சபைத் தலைவர் இரா - செல்வராசா தலைமையில் நடந்தது.

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட திஸ்கோ முகாமையாளர் திரு சிதம்பரநாதன் மகளிர் பயிற்சி நிலையத்தின் செயற்பாடு திட்டங்கள் பற்றி விளக்கி உரையாற்றினார்.

பின்னர் பூநகரி - நல்லூர் வை.எம்.சி.ஏ. தலைவர் வ. நவரத்தினமும் உரையாற்றினார்.

செல்வி க. சிவமலரின் நன்றி உரையுடன் கூட்டம் நிறைவெய்தியது.

இந்நிலையத்தில் தையல் மனையியல் போன்றவற்றில் 50 மகளிர் சிறப்புப் பயிற்சி பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

### திறமைச் சித்திபெற்ற மாணவிக்கு ரூ. 1000 பாடசாலை அதிபர் முன்மாதிரி

பூநகரி, மே 6

பூநகரி முழங்காவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவி செல்வி விக்கினேஸ்வரி ஏகாம்பரம் கடந்த ஜீ. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஐந்து பாடங்களில் அதிவிசேஷ சித்தி பெற்றார். மேற்படி மாணவிக்கு பாடசாலை அதிபர் திரு பொன் தில்லைநாதன் ரூபா 1000/- ரொக்கப் பரிசு வழங்கவிருப்பதாக அறிவித்துள்ளார்.

மேலும் அடுத்த பரீட்சையில் திறமைச் சித்தி பெறும் இருவருக்கும் தலா 1000/- ரூபா வழங்கவிருப்பதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

செல்வி விக்கினேஸ்வரிக்குரிய பணப்பரிசு இம்மாத நடுப்பகுதியில் மேற்படி கல்லூரியில் இடம்பெறும் இல்ல விளையாட்டின்போது கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனாப். எம். எம். மன்சூரினால் வழங்கப்படும்.

# தமிழரே விகாரைக்கு கூடுதலாக வந்தனர்

காங்கேசன்துறை திஸ்ஸ விகாரையின் விகாராதிபதியாக இருந்த வண. தெல்கெல்ல பதுமசிரி தேரர் 'யாழ்ப்பாணத்தில் என் அனுபவங்கள்' - என்ற தலைப்பில் சிங்களத்தில் புத்தகம் ஒன்றை எழுதியிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'சற்றர்டே ரிவியூ' என்ற ஆங்கில வார சஞ்சிகை இப் புத்தகத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பை வெளியிட ஆரம்பித்துள்ளது.

இதன் தமிழாக்கத்தின் இரண்டாம் பகுதி இன்று பிரசுரமாகின்றது.

1956க்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் பௌத்த பிக்குகள் படித்து வந்தார்கள் என்ற விஷயம் எனக்குத் தெரியவந்தது.

ஸ்ரீ நாவலர் ... கல்லூரியில் பல பிக்குகள் ஆங்கிலமும் தமிழும் படித்து வந்தனர். சொந்த விருப்பத்திலேயே படித்து வந்தனர்.

பல்கலைக்கழகத்தில் சிங்களம் படித்தவர்கள் தமிழும் அந்த நேரத்தில் இருந்தனர்.

இத்தகைய முறையான கல்வியை முதலில் குழந்தைகள் மத்தியில் புகுத்த எண்ணினேன்.

அனுராதபுரம் சர்வோதய நிலையத்துக்கு ஒரு தமிழ்ப் பெண்ணையும் ஒரு சிங்களப் பெண்ணையும் அனுப்பிப் பயிற்சி பெற வைத்தேன்.

இவர்களைப் பொறுப்பாக வைத்து ஆரம்ப பாடசாலை ஒன்றை ஆரம்பித்தேன். சிங்கள தமிழ் மாணவருக்கான பாடசாலையாக இது இருந்தது.

இந்த ஆரம்பப் பாடசாலையின் திறப்பு விழாவில் எல்லாச் சமயக் குருமார்கள், தமிழ்ப் பூசகர்கள், சிங்கள— தமிழ் மக்கள் அனைவரும் பங்குபற்றினர்.

#### ஜெயபாலசிங்கம் ஆற்றிய உரை

காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. ஜெயபாலசிங்கம் பெறுமதியான பேச்சு ஒன்றை நிகழ்த்தினார்.

காங்கேசன்துறையில் பௌத்த கோயில் ஒன்று கட்டப்படுவது பௌத்தர்களுக்கு மட்டுமல்ல தமிழர்களுக்கும் நன்மை என்று அவர் பேசினார்.

சமய, சாதி, இனபேதமின்றி வண. தெல்கெல்ல பதுமசிரி தேரர் சேவை புரிந்து வருகிறார் என்றும் அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

யார் பௌத்தர்? யார் சிங்களவர்? என்பதை இந்த பௌத்த பிக்குவைப் பார்த்தே தான் உணர்ந்துகொண்டதாக அவர் சொன்னார்.

எமது வேலைகள் குறித்து திருப்தியடைந்த அவர், பல ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான தளபாடங்களை ஆரம்ப பாடசாலைக்கு வழங்கினதும் அல்லாமல் விகாரைக்குத் தேவையான ஒலி, மற்றும் பொருள்களைக் கொடுத்து உதவினார்.

இந்த பௌத்த ஆலயத்தைக் கட்டும் முயற்சியை ஒருமேயர் எதிர்த்தார் என்று முன்னர் சொன்னேன் அல்லவா! அவர்தான் ஆலயத்தின் நல்விரும்பிகளில் ஒருவராக பின்னர் மாறினார்.

ஆலயத்தின் சேவை ஒரு வரையறைக்கு உட்பட்டது அல்ல.

அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்படும் பிரச்சினைகளை பொலிஸாரின் உதவியுடன் தீர்த்து வைக்கவும் நாம் உதவினோம்.

மொழிப் பிரச்சினை காரணமாக வேலை வாய்ப்பு மறுக்கப்பட்டவர்களுக்கு மேலிடத்துடன் தொடர்புகொண்டு நாம் உதவிய பல சந்தர்ப்பங்களும் உண்டு.

இந்த நடவடிக்கைகள் எல்லாம் தமிழ்மக்களிடம் இருந்து அளக்க முடியாத ஆதரவை எமக்குப் பெற்றுத் தந்தன.

எமது விகாரைக்கு பௌத்தர்களிலும் பார்க்க தமிழரே கூடுதலாக வந்து சென்றனர்.

ஒருமுறை ஆலயவேலைகளை முடிக்க மூன்றரை லட்சம் ரூபா தேவையாக இருந்தது. அவ்வாறு வேலைகள் முடிவடைந்து இருந்தன.

அன்றுமாலை முழுவதும் இதுபற்றியே சிந்தித்தேன்.

இரவு ஒரு சொப்பனம் கண்டேன். அக்கனவிலே புத்தர் பெருமான் தோன்றிப் பின்வருமாறு சொன்னார்.

"முட்டாள் பிக்குவே! எனக்காக ஏன் இவ்வளவு பணத்தைச் செலவழிக்கிறாய்? இப்பகுதியில் ஆதரவற்றவர்களுக்கு நீ எவ்வளவோ செய்ய இருக்கின்றதே! நீ அந்தவேலையைச் செய். என்னைப்பற்றிய கவலை விட்டுவிடு"— இப்படி புத்த பகவான் சொன்னார்.

உண்மையில் எனது அடிமனக் கருத்துக்கள் தான் என் கனவில் வெளிப்பட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

